Registered as a Newspaper

உதயன்

விலை ரூ-1/=

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஞூ தை மீ 15 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஐ. அவ். பிறை 17 (28-01-1986 UTHAYAN - A LIVELY TAMIL DAILY கதிர்:-61

நொதேண்
இன்ஸ்ரிரியூட்
A/L 86, 87
கணக்கியல் - பொருளியல்
அளவையியல் - வர்த்தகவியல்
அரசியல் - தமிழ்
கிறீஸ்தவம்
வகுப்புகள்
நடைபெறுகின்றன.
(சென். ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)

நொதேண்
இன்ஸ்ரிரியூட்
A/L 86
வினாவிடை வகுப்புகள்
பௌதிகவியல் - பொறியியல்
இரசாயனவியல்-வெப்ப இரசாயனம்
2.30 மணிக்கு
நடைபெறுகின்றன.
(சென். ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)

மலையகத் தமிழர் தாக்கப்பட்டனர்

தலவாக்கலையில் கொந்தளிப்பு; ஊரடங்கு அமுல்

வாகனங்கள் சேதம், கடை எரிப்பு; ஆஸ்பத்திரித் தண்ணீரில் நஞ்சு

— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, ஜன. 28

தலவாக்கலையில் பெரும் பதற்ற நிலையும் கொந்தளிப்பும் ஏற்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து பாதுகாப்புக் கருதி அங்கு உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கு அமுல் செய்யப்பட்டிருக்கிறது.

தலவாக்கலைப் பகுதியில் நேற்றும், ஞாயிற்றுக் கிழமையும் பெரும் பதற்ற நிலையும் கொந்தளிப்பும் ஏற்பட்டன.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களும், இ. தொ. கா. அலுவலரும் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டனர். அதைத் தொடர்ந்து பஸ்கள், அரசாங்க, திணைக்கள வாகனங்கள் சேதமாக்கப்பட்டன.

அதே வேளை, தொழிலாளர்களும் தொழிற் சங்கவாதியும் தாக்கப்பட்டதை ஆட்சேபித்து சுமார் 30,000 தொழிலாளர் நேற்று வேலை நிறுத்தம் செய்தனர் தலவாக்கலைப் பகுதியில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து அங்கு உத்தியோகப் பற்றற்ற ஊரடங்குச் சட்டம் நேற்று அமுல் செய்யப்பட்டது.

தலவாக்கலைச் சம்பவம் தொடர்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர்

(4-ம் பக்கம் பார்க்க)

குச்சவெளி முகாம்நோக்கி வந்த அந்த நபர் யார்?

திருகோணமலை, ஜன. 28

குண்டு துளைக்காத உடை அணிந்த போராளி ஒருவர் குச்சவெளி முகாமை நோக்கி வந்தார் என பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

குச்சவெளி ஆயுதப் படை முகாம் பிரதேசத்தில் ஞாயிறு இரவு 11. 30 மணி அளவில் பலத்த துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றது.

இது சம்பந்தமான அறிக்கை ஒன்றிலேயே குண்டு துளைக்காத உடை அணிந்த போராளி முகாமை நோக்கி வந்தார் எனவும் படையினர் சுடச்சுட அந்த நபர் முகாமை நோக்கியே வந்தார் எனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்து இருந்தன.

பிறகு அந்த நபர் மறைந்து விட்டாராம்.

மாட்டிறைச்சி இரத்தத்தைப் பூசியபடி செத்தவன்போல் கிடந்தேன்

ஒட்டுசுட்டானில் தப்பியவர் தகவல்

-நல்லூர் செய்தியாளர் க. இரத்தினராஜசிங்கம்

நல்லூர், ஜன. 28

மரணமான ஒருவரின் இரத்தத்தையும் மாட்டிறைச்சி இரத்தத்தையும் தடவி நான் செத்தவன் போல் கிடந்து தப்பித்துக்கொண்டேன்.

நேற்று முன்தினம் ஒட்டுசுட்டானில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் மயிரிழையில் உயிர் தப்பிய இருளன் மாணிக்கம் (30 வயது) உதயன் செய்தியாளரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவர் ஒட்டுசுட்டான் கிராம சபையில் சிற்றூழியராக வேலை செய்கிறார்.

நடந்த சம்பவம் பற்றி இவர் தெரிவித்ததாவது:

ஞாயிற்றுக்கிழமை காலை 9மணியளவில் ஒட்டுசுட்டான் வீதியால் 20 க்கு மேற்பட்ட

4-ம் பக்கம் பார்க்க

நேற்று சுன்னாகத்தில் நடந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் போது எடுக்கப்பட்ட படங்கள். சுன்னாகம் சந்தை மைதானத்தில் நடந்த கூட்டத்தையும் அதற்கு முன் நடந்த ஊர்வலத்தையும் படங்களில் காணலாம்.

—படங்கள்: சபா. புஷ்பநாதன்—

அந்தந்தப்பகுதி ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜன. 28

கிராமப்புறங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளில் வைத்துக் குணப்படுத்த முடியாத நோயாளிகளை மட்டுமே யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று ஆஸ்பத்திரியில் நடந்த மாநாட்டில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஏனைய நோயாளிகள். இயன்ற அளவு தங்கள் பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டு உள்ளது.

இக்கட்டான இத்தருணத்தில் ஆஸ்பத்திரி நிர்வாகத்துடன் ஒத்துழைக்கும்படி பொதுமக்களுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

முச்சந்திமுரளி



குண்டு துளைக்காத உடுப்புப் பற்றி ஏதோ சொல்லுகினம். அது அவையின்ரை கற்பனை இல்லாமல் உண்மையாக இருந்தா, எங்கடை பெடியளிடை கெட்டித்தனம் அவைக்குப் பயத்தைக் குடுக்குது எண்ட அர்த்தம் எல்லோ...

சுதந்திரதின கொண்டாட்டம்

கொழும்பு, ஜன 28

இலங்கை சுதந்திர தினக் கொண்டாட்டம் உத்தியோகரீதியில் ஸ்ரீ ஜெயவர்த்தனபுரத்தில் நடைபெறுகின்றது.

இதை ஒட்டி கொழும்பில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

1,000 பொலீஸார் விசேட கடமைக்காக வெளியூர்களில் இருந்து வரவழைக்கப்பட்டு உள்ளனர்.

இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன, அமெரிக்க ஜனாதிபதி றேகன், இஸ்ரவேல் தலைவர் சிமொன் பெரஸ் ஆகியோரின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்ட காட்சி.

-படம்: சபா. புஷ்பநாதன்

சுன்னாகத்தில் நேற்றும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

ஜே. ஆர். றேகன், பெரஸ் கொடும்பாவிகள் எரிப்பு

-சுன்னாகம் செய்தியாளர்: சபா புஷ்பநாதன்-

சுன்னாகம், ஜன. 28

தமிழ் மண்ணில் தமிழரும் அகதிகளாக்கப்படும் நிலையை உலகுக்கு உணர்த்தவும் தமிழர்கள் மீது அரச படைகள் நடத்தும் இனக் கொலைகளை கண்டித்தும் பாதுகாப்பு வலயத்தை அகற்றக் கோரியும் பல்லாயிரக் கணக்கானோர் நீண்ட ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நேற்றுச் சுன்னாகத்தில் நடத்தினர்.

வயோதிபர்கள், விவசாயிகள், இளைஞர்கள் மாணவ மாணவிகள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோயிலில் இருந்து ஆரம்பமாகிக் காங்கேசன்துறை வீதியால் மருதனாமடம் ஊடாகச் சுன்னாகம் பொதுச் சந்தையை அடைந்தது.

அமெரிக்க ஜனாதிபதி றேகனுடன் ஜனாதிப ஜே. ஆர். ஜெயவர்த்தன இஸ்ரவேல் தலைவ சீமொன்பெரஸ் ஆகியோ ரின் கொடும்பாவிகள் ஊர்வலத்தில் எடுத்து செல்லப்பட்டன.

யசிர் ஆரபாத் -ஈரான்

(4-ம் பக்கம் பார்க்க)

14 பேர் உயிருடன் எரிப்பு

சென்னை, ஜன. 27

தமிழ் நாட்டில் திருச் சிக்கு அருகே வீடு ஒன்று தீ வைக்கப்பட்டதா ஒரே குடும்பத்தை சேர்ந்த 14 பேர் தீயில் கருகி மரணமானார்கள். வீட்டுக்காரர் நித்திரை யாகி இருந்த வேளையில் 200 பேர் கொண்ட கிராம வாசிகள் கூட்டம் இந்த வீட்டுக்குத் தீ வைத்தது.

இரு கிராமத்தவர் களுக்கு இடையிலான தலைப்பட்ட தகராறு இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

கும்புறுப்பிட்டியில் 7 தமிழர்பலி

திருகோணமலை, ஜன. 28

கும்புறுப்பிட்டியில் ஆயுதப் படையினரின் தேடுதலின் போது 7 தமிழர்கள் துப்பாக்கிச் சூடு தாக்கி மரணமானார்கள்.

இறந்தவர்களின் பெயர் விவரங்கள் கிடைக்கவில்லை.

அவர்களின் சடலங்களைப் படையினர் எரித்து விட்டனராம்

இதனிடையில் போராளிகள் தாக்கினர் என்று திருப்பிச் சுட்டதில் ஏழு பேர் மரணமானார்கள் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

2 அலுவலகங்கள் முன் நேற்று மறியல்

தெருக்கூத்தும் நடந்தது

நல்லூர், ஜன, 28

நேற்றும் ஐந்தாவது நாளாக யாழ். மாவட்டத்தில் இரண்டு அரச அலுவலகங்கள் முன் மறியல் போராட்டம் நடந்தது.

யாழ் உதவி அரசாங்க அதிபர் பணிமனை முன் மறியல் போராட்டம் நடைபெறவில்லை.

யாழ். செயலகத்துக்கு முன்பாக நடந்த மறியல் போராட்டத்தில் 100-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளும் இப்போராட்டத்துக்கு வந்திருந்து ஆதரவு கொடுத்தனர்.

அரசாங்க அதிபர் யாழ். வை. எம். சி. ஏ. மண்டபத்தில் வந்திருந்தார்.

ஊழியர்கள் எவரும் உட்செல்ல நேற்று அனுமதிக்கப்படவில்லை.

யாழ் கல்வித் திணைக்களத்துக்கு முன்பாக 75க்கும் மேற்பட்ட நல்லூர் சங்கிலியன் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்கள் மறியல் போராட்டம் நடத்தினர்.

இதனால் கல்வித் திணைக்கள ஊழியர் வேலைக்குச் செல்ல முடியாமல் திரும்பிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

யாழ். செயலகத்திற்கு முன்பாக இளைஞர்களின் தெருக்கூத்தும் நடைபெற்றது.

தொழில் அலுவலகம் இடம்மாற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இயங்கி, வந்த யாழ்ப்பாண மாவட்ட தொழில் அலுவலகம் தற்பொழுது 250, கஸ்தூரியார் வீதியிலுள்ள ஊழியர் சேமலாப நிதிக் கந்தோருக்குக் கருகாமையிலுள்ள பகுதிக்கு தற்காலிகமாகஇடம்மாற்றப்பட்டுள்ளது.

இக்கட்டடத்தில் இந்த அலுவலகம் 2ஆம் மாடியில அமைந்துள்ளது.

தொலைபேசி இலக்கம்: 24147

அமைச்சர் லலித் கிண்டல் செய்கிறார்

கொழும்பு, ஜன. 28

தமிழர் பாரம்பரிய பிரதேசம் என்று கூறப்படும் பகுதியில் முன்னர் நான்கு கால் புலிகள் தான் இருந்தன.

இரண்டு கால் புலிகள் வாழ்ந்ததாகச் சான்றுகள் கிடையா.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி சொன்னார்.

அங்குறுசஹா என்னும் இடத்தில் ஒரு கூட்டம் ஒன்றில் பேசுகையில் அமைச்சர் மேலும் சொன்னதாவது;

யாழ் மக்களின் நன்மை கருதித்தான் பாதுகாப்பு வலயம் பிரகடனப்படுத்தப்பட்டது.

இதை எதிர்த்து யாழ் மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர்.

தீவிரவாதிகளின் தூண்டுதல் காரணமாக இதனைச் செய்கின்றனர்.

அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தட்டும்! தீவிரவாதிகளினால் வரும் ஆபத்தை அவர்களே அனுபவிக்கட்டும்.

தென் இலங்கை இளைஞர்கள் தீவிரவாதிகளை எதிர்த்துப் போராடுதல் வேண்டும். அதற்கு முன்னர் நல்ல கல்வி பெற வேண்டும் —

இப்படி அமைச்சர் சொன்னார்.

கிளிநொச்சி ரயில் நிலையச் சூடு

பாரபட்சமற்ற விசாரணை

நடத்துவதாக லலித் வாக்குறுதி

சம்பந்தப்பட்ட சிப்பாய் ஒருவர் கொழும்பில்

கொழும்பு, ஜன. 29.

கிளிநொச்சி ரயில் நிலையத்தில் பயணிகள் சுட்டுக் கொலை செய்யப்பட்டது குறித்துப் பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்படும்.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி, தம்மைச் சந்தித்த இ.தொ.கா. பொதுச் செயலாளர் திரு. எம்.எஸ். செல்லச்சாமிக்கு இவ்வாறு உறுதி அளித்திருக்கிறார் என அறிய வந்தது.

ரயில்நிலையத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டவர்களில் பலர் மலையகத் தமிழர் என்றும் அவர்கள் 1983 கலவரத்தைத் தொடர்ந்து அகதிகளாகி, கிளிநொச்சியில் குடியேறியவர்கள் என்றும் திரு. செல்லச்சாமி எடுத்துரைத்தார்.

இதற்கிடையில், இச்சம்பவம் குறித்து, பாதுகாப்பு அமைச்சு நேற்

4-ம் பக்கம் பார்க்க

கிளிநொச்சி துப்பாக்கிசூடு

படங்கள் 4-ஆம் பக்கம்

சுபநேரம்

28.1.1986

செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:
11 06 முதல் 12.36 வரை
ராகுகாலம்:
3 36 முதல் 5.06 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

வரும் சான்ஸை எப்படிக் கைவிடுவது?

கேட்பவர் ராதா

'ஜப்பானில் கல்யாணராமன்' படத்தைத் தொடர்ந்து 'அம்மன் கோவில் கிழக்காலே' 'மனக் கணக்கு' படங்களில் நடித்துக் கொண்டிருக்கிருர் ராதா.

இவர் தெலுங்கு மலையாளப் படங்களில்தான் அதிக கவனம் செலுத்துகிருர். ஒரு சில தமிழ்ப்படங்களிலேயே நடித்துக் கொண்டிருக்கிருர்.

இதைப்பற்றி அவரே குறிப்பிடுகிருர்:

'தெலுங்கிலும், மலையாளத்திலும் அடுத்தடுத்து நல்ல ரோல்கள் கிடைக்கின்றன. நானும் ஒரு படத்தையும் விடாமல் ஒப்புக்கொள்கிறேன்.

தெலுங்கில் முப்பத்தைந்து படங்களை முடித்திருக்கிறேன். இப்போதும் ஆறுபடங்களில் நடித்துக்கொண்டிருக்கிறேன். 'ரேவதிகு டிக்கு ஒரு பாவை' மலையாளப் படத்தில் நல்ல கேரக்டர் ரோல் செய்கிறேன்.

இடையே நல்ல படங்கள் கிடைக்கும் போது தமிழிலும் ஒப்புக்கொளகிறேன்.

கேரக்டர் வேடங்களை மட்டுமே செய்ய வேண்டும் என்று காத்திருந்தால் சில நல்ல படங்களில் நடிக்கும் சந்தர்ப்பத்தை இழந்திருப்பேன்.

கிளாமர் வேடங்களில் மட்டும் தான் நடிப்பேன் என்று நான் நிந்தனை விதிப்பது இல்லை.

அதேநேரம் என்னை நம்பி கேரக்டர் ரோல் கொடுத்தாலும் செய்யமுடியும் என்பதை பல தடவைகள் நிருபித்துக் காட்டி இருக்கிறேன்.

தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி ஆகிய மொழிப் படங்களில் தொடர்ந்து வரவேற்பு இருப்பதே பெரிய விஷயம்.

ஏவி. எம். புரொடக்ஷனில் ஒரு படமும் சத்யா மூவீஸின் இரண்டு படங்களிலும் ஒப்பந்தமாகி இருக்கிறேன். இப்படங்களில் மோகன், கமல், சிவகுமார் ஆகியோருடன் நடிக்கப் போகிறேன்.

'முதல் மரியாதை' கிளாமர் வேடங்களை மட்டும் அல்லாமல் கேரக்டர் வேடங்களையும் என்னால் செய்ய முடியும் என்பதை நிருபித்தது.

செல்லும் இடங்களில் எல்லாம் அந்த வேடத்தைப் பற்றிய பாராட்டுகள் கிடைத்தன என்ருர் ராதா.

சீன- ரஷ்ய பதற்றம் நீக்கம்

மாஸ்கோ, ஜன. 27

சோவியத்— சீன நட்புறவில் நிலவிய பதற்ற நிலை நீங்கி விட்டதாக சோவியத் தலைவர்கள் அறிவித்து உள்ளனர்.

சுமுக உறவு ஏற்படும் வாய்ப்பு உருவாகி வருவதாகவும் சோவியத் ரஷ்யா அறிவித்துள்ளது.

உகண்டா இராணுவ ஆட்சி சபை கலைப்பு

தேசிய எதிர்ப்பு இராணுவம் அறிவிப்பு

கம்பாலா, ஜன. 27

உகண்டாவில் ஜெனரல் ஒகெல்லோ தலைமையிலான இராணுவ ஆட்சி சபை உடனடியாகக் கலைக்கப்பட்டு விட்டது.

தலைநகர் கம்பாலா தேசிய எதிர்ப்பு இராணுவத்தின் முழுமையானப் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுவிட்டது.

தேசிய எதிர்ப்பு இராணுவ தலைவரும் முன்னுள் பாதுகாப்பு மந்திரியுமான முசாவெனின் உகண்டா வானெலியில் உரையாற்றும் பொழுது மேற்கண்டவாறு அறிவித்தார்.

அவர் மேலும் தமது உரையில்;

உகண்டாவில் அமைதியும் இணக்க உறவும் ஏற்படுத்த எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப் படும்.

ஆட்சியைச் சார்ந்திருந்த எல்லா ஆயுத குழுக்களுடனும் பேச்சுவார்த்தை நடத்த நாம் தயாராகவே இருக்கிருேம்.

பல ஆண்டுகால திறமையற்ற ஆட்சியினுல் ஆபிரிக்காவிலேயே மிகவும் பின் தங்கிய நாடாக உகண்டா இருந்து வந்துள்ளது.

இதனுல் எல்லா வெளிச் செலாவணி வர்த்தக நடவடிக்கைகளும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டுள்ளன.

முன்னைய ஆட்சிக் காலத்தில் 5 லட்சத்துக்கு மேற்படடோர் கொல்லப்பட்டனர்.

இதற்குப் பொறுப்பானவர்கள் தேடிப்பிடிக்கப்படுவர். அதற்கான தண்டனைகளும் அவர்களுக்கு வழங்கப் படும் என தெரிவித்தார்.

கம்பாலாவின் வடபகுதியில் அரச துருப்புக்கள் பின்வாங்கிய பொழுது சொள்ளை, சூறையாடல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதிகளிலிருந்து ஐ. நா. அலுவலகப் பணியாளர் உட்பட பல அகதிகள் கென்யாவுக்குச் சென்று கொண்டிருப்பதாகவும் செய்திகளில் தெரிவிக்கப்பட்டது.

நிதி நெருக்கடியில் ஐக்கிய நாடுகள் சபை

ஐ. நா, ஜன. 27

மிக மோசமான நிதி நெருக்கடி ஒன்றை ஐக்கிய நாடுகள் சபை எதிர் நோக்கி இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

159 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஐ நா சபை நிர்வாகம், மேலதிக நிதியைப் பெறும் வழிவகைகள் பற்றி ஆராய்கிறது.

இது சரிவராதுபோனுல் தனது செயல் திட்டங்களைக் குறைக்க வேண்டி வரும் என்று ஐ. நா உதவி செயலாளர் நாயகம் பட்ரிசியோ ருடாஸ் தெரிவித்தார்.

அரசாங்கங்கள் விரும்பும் பணத்தை எம்மால் செலவழிக்க முடியாது உள்ளது என்றும் அவர் சொன்ஞர்.

ஐ. நா ஸ்தாபனத்தில். 1985 ஆம் ஆண்டு பட்ஜட் 80 கோடி டாலர்களாகும். ஆனுல் 1985 முடிவில் பட ஜட் வருமானத்தில் இருபத்திரண்டரை கோடி டாலர் துண்டு விழுந்து விட்டது.

ஊழியரின் போக்குவரத்துச் செலவுகளைக் குறைத்தால் ஆக ஒன்றரை கோடி டாலரைத் தான் சேமிக்க முடியும்.

நிதி நெருக்கடி பற்றி ஆராய்வதற்காக ஐ நா சபையின் விசேட பொதுக்கூட்டம் ஒன்றை நடத்த வேண்டி ஏற்படும் என்று ஐ நா பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

லிபியாவைத் தாக்க கிறீஸில் உள்ள தளங்களை அமெ. பாவிக்க முடியாது

கிறீஸ், ஜன. 27

கிறீஸ் நாட்டில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்களைப் பயன்படுத்தி லிபியாவைத் தாக்க அமெரிக்காவுக்கு அனுமதி அளிக்கப் போவது இல்லை என்று கிறீஸ் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதனிடையில் கூட்டு இராணுவ நடவடிக்கை ஒன்றை லிபியாவுக்கு எதிராக எடுப்பது பற்றி ஆராயும்படி மத்திய புலன் விசாரணைப் பிரிவை அமெரிக்க அதிபர் றேகன் பணித்து இருப்பதாகச் செய்தி வெளிவந்துள்ளது.

ரஷ்யாவின் உதவியை லெபனுன் கோருகிறது

பேரூட், ஜன. 27

லெபனுனில் உள்ளமுஸ்லிம் தலைவர்களுனை கருத்து வேற்றுமைகளைத் தீர்த்து வைத்து உதவும்படி சோவியத் ரஷ்யாவுக்கு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

வேண்டுகோள் விடுத்துள்ளவர் லெபனுன் ஜனுதிபதி ஜெமாயல்.

இராணுவ செலவுகளை ரஷ்யா அதிகரிக்கிறது

நேட்டோ இராணுவ அமைப்பு குற்றச்சாட்டு

பிரஸ்ஸல்ஸ், ஜன. 27

இராணுவச் செலவுகளை ரஷ்யா அதிகரித்துள்ளது.

நேட்டோ இராணுவ அமைப்பு நடத்திய ஆய்வில் இது வெளியாகியது.

பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இராணுவ நடவடிக்கைகளை அதிகரிப்பதில் ரஷ்யா அக்கறை காட்டியுள்ளது.

சோவியத் இராணுவச் செலவில் 1991 வரை 3 சதவித அதிகரிப்பு தொடர்ந்து இருக்கும் என்று நேட்டோ அமைப்பு எதிர்பார்க்கிறது.

வெளி உலகில்

அமெரிக்கா - ஜப்பான் - தென்கொரியா கூட்டு

ரஷ்யா, வடகொரியா எதிர்ப்பு

மாஸ்கோ.ஜன.27

ஆசிய நாட்டில் அமெரிக்கா, ஜப்பான், தென் கொரியா ஆகிய நாடுகள் அடங்கிய இராணுவ அமைப்பு ஒன்றை நிறுவுவதை ரஷ்யாவும் வட கொரியாவும் எதிர்த்துள்ளன.

உத்தேச இராணுவ அமைப்பு, நேட்டோ அமைப்பை ஒத்துள்ளது என்றும் ரஷ்யாவும் வட கொரியாவும் கண்டித்துள்ளன.

புதியஅமைப்பு,ஆசியாவில் பதற்ற நிலையை உருவாக்கும் என்று அறிவிக்சப்பட்டுள்ளது.

ஜெர்மன் நிறுவனம் இந்தியாவுக்கு ஆயுத விற்பனை

பொன், ஜன. 27

மேற்கு ஜெர்மனி நிறுவனம் ஒன்று இந்தியாவுக்கு ஆயுதங்களை விற்பனை செய்ய முன்வந்துள்ளது.

ஊர்காவற்றுறையில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

யாழ்ப்பாணம்,ஜன. 28

அரசாங்கத்தினுல்அண்மையில் கொண்டு வரப்பட்ட பாதுகாப்புவலயச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக, இன்று செவ்வாய்கிழமை ஊர்காவற்றுறைப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்துகின்றனர்.

ஊர்காவற்றுறைஉதவி அரசாங்க அதிபருக்கூடாக அரசுக்கு மஜர் ஒன்று சமர்ப்பிக்கப்படும்.

இந்த நடவடிக்கைக்கென ஊர்காவற்றுறையைச் சேர்ந்த பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட செயற்குழு ஒன்று தெரிவாகியுள்ளது.

சித்த வைத்தியத் துறை

ஆண்டு விழாவும் மலர் வெளியீடும்

யாழ்ப்பாணர்,ஜன. 28

யாழ் பல்கலைக்கழகச் சித்திய வைத்தியத் துறையின் முதலாவது ஆண்டு விழாவும் மலர் வெளியீடும் இன்று செவ்வாய்க்கிழமை கைதடியில் சித்த மருத்துவத் துறை அரங்கில் இடம் பெறும்.

சிவதர்ம வள்ளல் க. கனகராசா மூலிகை மரம் நட்டு விழாவைத் தொடக்கி வைப்பார்.

சித்த மருத்துவத் துறைத் தலைவர் டாக்டர் எஸ். பவானி ஆரம்ப வுரை நிகழ்ந்துவார்.

தமிழ்த் துறை உதவி விரிவுரையாளர் திரு. கனகசபாபதி நாகேஸ்வரன் தலைமையில் கவியரங்கு நடைபெறும்.

சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. இ. பாலசுந்தரம் தலைமையில் சித்த மருத்துவக் கருத்தரங்கு நடைபெறும்.

பிற்பகல் நிகழ்ச்சிகளில் 'சித்த மருத்துவம் 1985' மலர் வெளியீட்டு விழா இடம் பெறும்.

துணைவேந்தர் பேராசிரியர் சு வித்தியானந்தன் முதல் பிரதியைப் பெறுவார்.

ஆய்வுரைகளும் இடம் பெறும். சித்த வைத்தியத் துறைப் பட்டதாரி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

மினிசினிமா

புதிய வெளியீடு!

நவா மினி (உஷா மினி முன்பாக)

DOGS OF WAR, MISSING IN ACTION, RAMBO வரிசையில்

RICHARD HARRIS இராணுவத் தளபதியாக

RICHARD ROUNDREE கெரில்லாத் தலைவராக

Game for Vultures

காட்சிக்குக் காட்சி விறுவிறுப்பான தாக்குதல்களைக் கொண்டது.

இராணுவ விமானத்தையே தகர்க்கும் வீரசாகசம் (முழுக்க முழுக்க நவீன ஆயுதம்)

* முதல்வதாக எமது மினியில் மட்டுமே காண்பிக்கப்படுகிறது.

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

* கிளிநொச்சி ரயில் நிலையத் தாக்குதலை அடுத்து பல இடங்களில் குண்டுகள் விழுந்தன

கிராம மக்கள் இரவை காடுகளில் கழித்தனர்

கிளிநொச்சி, ஜன.28

கிளிநொச்சி ரயில் நிலையத் தாக்குதலை அடுத்து உருத்திரபுரம், பரந்தன், இரணைமடுச் சந்தி, முறிப்பு, வட்டக்கச்சி, திருநகர் ஆகிய இடங்களிலும் குண்டுகள் விழுந்து வெடித்தன.

மக்கள் பீதியால் காடுகளை நோக்கி ஓடினர். பலர் இரவைக் காடுகளிலேயே கழித்தனர்.

திருநகரில் விழுந்த குண்டினுல் சில வீடுகள், கடைகள் சேதத்துக்கு உள்ளாகின. மாடு ஒன்றும் குண்டுபட்டு சிதறியநிலையில் இறந்து கிடந்தது.

ரயில் நிலையத் தாக்குதலில் மரணமானேரின் சடலங்கள் கிளிநொச்சி ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தன.

மூவற்றில் இருசடலங்கள் விசாரணைநடைபெற முன்னரே உறவினர்களால் எடுத்துச் செல்லப் பட்டுவிட்டன.

ஏனைய சடலங்கள் மரணவிசாரணைக்கு உட்படுத்தப்பட்டன. கிளிநொச்சி நீதிவான் திரு. பி பாலச்சந்திரன் மரண விசாரணை நடத்தினுர்.

முத்தையா மகேந்திரன் வயது 24 (உருத்திரபுரம்). பொன்னம்பலம் சோமசேகரம் (வவுனியா, இராசரத்தினம் துரைச்சாமி கதிர்காமநாதன் 20 வயது (உதய நகர்) இராமலிங்கம் அழகையா வயது 48 (கிளிநொச்சி)பாண்டி சிவகுரு 26(கிளிநொச்சி), வயது

குலசேகரம் தங்கம்மா 69 வயது (திருநகர்) திருமதி துரைராசா சின்னமணி 40 வயது (திருகோணமலை). சுகந்தன் வயது 12 (திருகோணமலை, சுகந்தினி வயது 12 (திருகோணமலை) இருவரும் தாயும் மகளும்.

மேற்கண்டோரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டன.

இச்சம்பவத்தின்போது [illegible] சிறுவன் ஒருவனும் மாணமாகியுள்ளார். சிலரின் தாய், தகப்பன், தமையன் துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளானுர்கள்.

காயமடைந்து கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளோரில் ஹார்திமேரி செபஸ்தியான் 30 வயது (திருநகர்) சி. மார்க்கண்டு 45 வயது (இராமநாதபுரம்), எஸ் சின்னத்துரை (திருநகர்), திருமதி மல்லிகா அரசரத்தினம் (திருநகர்) ஆகியோரும் அடங்கியுள்ளனர்.

இதற்கிடையில் ரயில் நிலையத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்த தனது சகாக்களை இராணுவ லெப்டினன்ட் ஒருவர் வந்து கட்டுப்படுத்திஞர் என்று கூறப்படுகிறது. இறந்தவர்களின் சடலங்களையும் காயப் பட்டோரையும் அவரே கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தாராம்.

அன்னதான மடத்துக்கு அடிக்கல்

வட்டுக்கோட்டை, ஜன. 28

வட்டுகோட்டை கிழக்கில் எழுந்தருளியிருக்கும் இலுப்பையடி ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் அன்னதான மடத்துக்கான அடிக்கல் நடும் விழா அம்பாள் திருப்பணிச் சபைத் தலைவர் திரு. த. அருணகிரிநாதன் தலைமையில் நடைபெற்றது.

திரு. இலட்சுமணர் கோணேஸ்வரன் முதலாவது சங்கை வைத்து அடிக்கல்லை நட்டார்.

அம்பாள் ஆலய தர்மகர்த்தா திரு. க சிவலிங்கம் அதிபர், அம்பாளின் அன்னதான மண்டபத்தின் அவசியத்தையும் பொதுமக்கள் அம்பாளிடம் வைத்துள்ள பக்திச் சிறப்பையும் அம்பாளின் வரலாற்றுச் சிறப்பினையும் குறிப்பிட்டு உரையாற்றினர்.

தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்க ஊழியருக்கு விபத்து நல ஒய்வூதியத் திட்டம்

கைதடி, ஜன 28

தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கத் தொழிலாளர்களுக்காக விபத்து நல ஒய்வூதியத் திட்டம் சம்பந்தமாக புதிய நடைமுறை ஒன்று கொண்டு வரப்பட இருக்கிறது.

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை முன்னுள் தலைவர் திரு. என். இராசேந்திரம் மேற் கண்ட தகவலை வெளியிட்டார்.

[illegible] பகுதி தெங்கு பனம் பொருள் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் 12 ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் சனிக்கிழமை (25 - 1 - 1986) நடைபெற்றது. சமாஜ பொது முகாமையாளர் என்ற முறையில் திரு. இராசேந்திரம் கலந்து கொண்டு பேசுகையிலேயே இத்தகவலை வெளியிட்டார்.

பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. த. நடராசா, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. வேலாயுதபிள்ளை ஆகியோரும் பேசினர்.

புதிய நிருவாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ஆ. சின்னத்துரை உப தலைவர்: வி. தேவராசா செயலாளர்: சி. க. பொன்னுத்துரை 6 பேர் கொண்ட செயற் குழுவும் தெரிவானது.

கையில் 6 விரல்கள் இருக்கின்றன

நீ சுடமாட்டாய் என்றனர்

மைத்துனருக்கு சூடு விழுந்தது

காங்கேசன்துறை. ஜன, 28

எனது கை விரல்களை அவதானித்த இராணுவத்தினர் "உனக்கு ஆறு விரல்கள் இருக்கின்றன நீ சுடமாட்டாய்' என்று கூறி என்னை ஓடுமாறு பணித்தனர். நான் ஓடினேன் ஆனுல் என்னுடன் நின்ற எனது மைத்துனரை அவர்கள் சுட்டுக் கொன்றவர்'

தெல்லிப்பழை சுப்பிரமணியம் செல்வநாயகம் (32 வயது) என்பவரின் மரண விசாரணையில் சாட்சியமளித்த இறந்தவரின் மைத்துனர் சின்னத்துரை சிவதாஸ் மேற்கண்டவாறு கூறினுர்.

கடந்த 23ஆம் திகதி தெல்லிப்பழையில் நடந்த இராணுவ முற்றுகையின் போது சுட்டுக் கொல்லப் பட்ட சுப்பிரமணியம் செல்வநாயகம் என்பவரது மரணம் தொடர்பான விசாரணை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராஜாவால் நடத்தப்பட்டது.

மல்லாகம் நீதிபதியின் பணிப்பின் பேரில் மரண விசாரணை நடைபெற்றது.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் நடைபெற்ற இம்மரண விசாரணையில் சின்னத்துரை சிவதாஸ் மேலும் கூறியதாவது;-

நான் விற்பனையாளராக கடமை புரிகின்றேன். இறந்தவர் எனது மைத்துனர் இருவரும் தையிட்டிக்கு போவதற்க சைக்கிளில் வந்தோம். தெல்லிப்பழையிலிருந்து காங்கேசன்துறை வீதியால் வந்து வீமன்காமம் ஒழுங்கையால் திரும்பியபோது அங்கு வளவுக்குள் இராணுவத்தினர் நிற்பதைக் கண்டோம்.

நாம் பயத்தினுல் சைக்கிளை விட்டு இறங்கி நின்றோம். இராணுவததினர் அருகில் வரும்படி அழைத்தனர். கைகளை உயர்த்தியபடி இருவரும் சென்றோம்.

அப்போது மைத்துனர் மீது அவர்கள் சுட்டனர். அடுத்து என்னை பார்த்தனர். எனது கையில் 6 விரல்கள் உண்டு. அதனைப் பார்த்து இராணுவத்தினர் நீ சுடமாட்டாய். ஓடு என்றனர். நான் சைக்கிளைப் போட்டுவிட்டு ஓடிவிட்டேன்.

பின்பு அயலவர்கள் இறந்த எனது மைத்துனரை தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்த்தனர். இவ்வாறு அவர் கூறினுர்.

பிரேத பரிசோதனை நடத்திய தெல்லிப்பழை மாவட்டவைத்திய அதிகாரி திரு. எஸ். கதிரவேற்பிள்ளை சாட்சியமளிக்கையில்:-

இறந்தவரை சுப்பிரமணியம் நடராசா, சின்னத்துரை சிவதாஸ் ஆகியோர் அடையாளம் காட்டினர். உடலை பரிசோதனை செய்தேன். வலது பக்க நெஞ்சிலும் முதுகிலும் துளை கயங்கள் காணப்பட்டன துப்பாக்கிச் சன்னம் சுவாசக் குழாய்களை ஊடுருவிச் சென்று காணப்பட்டது. இரக்தப்பெருக்கு அதிர்ச்சி என்பன காரணமாக அவர் இறந்துள்ளார் என்ருர்.

காங்கேசன்துறை பொலீஸைச் சேர்ந்த அலெக்ஸ் செபஸ்தியனும் சாட்சியமளித்தார்.

விசாரணை முடிவில் துப்பாக்கிச் சூட்டால் ஏற்பட்ட கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது!

உதய சங்கற்பம்

கடமையைச் செய்.
பலனை எதிர்பாராதே.
-- கிருஷ்ண பரமாத்மா

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 24805
22073
28-01-86 த. பெ. 28

போன மச்சான் திரும்பி வாறார்...!

இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரி அடுத்த வாரம் கொழும்பு வருகிறார். அவர் அடிக்கடி புதுடில்லியிலிருந்து கொழும்பு விரைவது எதற்காக என்பதை எங்கள் தமிழ் மக்கள் எல்லோரும் அறிவார்கள்.

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் இந்தியா ஒரு மத்தியஸ்தராகவும், உதவுநராகவும் செயற்பட்டு வருகிறது. 1983 ஜூலையில் நடந்த பெரிய அளவிலான இனப் படுகொலைகளைத் தொடர்ந்து, இந்தியா இந்த விவகாரத்தில் விரும்பியோ விரும்பாமலோ தலையிடவேண்டியதாயிற்று இரண்டரை வருடங்கள் கழிந்துபோயின. எனினும் இனப்பிரச்சினை விவகாரம் இப்போதும் ஆரம்ப கட்டத்திலேயே உள்ளது. தொடக்க நிலையில் இருந்ததில் இருந்து ஒரு சாண்கூட நகர்ந்ததாகக் கருதமுடியவில்லை. இலங்கை ஜனாதிபதியின் பேச்சுக்களும் பேட்டிகளும் அவரின் சீடப்பிள்ளைகளின் நேரத்துக்கொரு கதை என்ற போக்கும் அவ்வாறு கருத வைக்கின்றன.

அதேநேரத்தில் தமிழ் மக்களை அழித்தொழிக்கும் இனப் படுகொலையை அரசாங்கம் வெகு சாதுரியமாகத் திட்டமிட்டுச் செய்துவருகிறது. பயங்கரவாதத்தைப் பூண்டோடு அழிக்கும் முயற்சி என்ற போர்வையில் தமிழ் மக்கள் நாளாந்தம் கொலை செய்யப்படுகிறார்கள். தங்கள் பாரம்பரிய தாய் மண்ணிலிருந்து விரட்டி அடிக்கப்படுகிறார்கள். தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் வாழ்க்கையின் இறுதி நெருக்கடிக் கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சாவா, வாழ்வா என்ற நிலைக்கு வந்துவிட்டார்கள்.

அந்தச் சந்தர்ப்பத்தில் தான் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியில் இந்தியாவின் சிறப்புத் தூதுவராக அடுத்த வாரம் கொழும்பு வருகிறார் பண்டாரி. அவர் இதே பணிக்காக இலங்கை வருவது இது ஆறாவது தடவை. முந்திய ஐந்து முறைகளின் போதும் அவர் மேற்கொண்ட முயற்சிகள் எந்த அளவுக்குப் பலன் அளித்தது என்பது எவருக்கும் சரியாகத் தெரியாது திப்புப் பேச்சுக்களில் அவர் நடந்து கொண்டவிதம் அவருக்குக் கீர்த்தியைக் கொடுத்ததாகவும் சொல்ல முடியவில்லை.

திரு.பண்டாரி மார்ச் மாதத்தில் ஓய்வு பெறுகிறார் என்றும், அதனால் இனி அவர் இந்தியாவின் சிறப்புத் தூதுவராக இலங்கை வரும் வாய்ப்புகள் மிகக்குறைவு என்றும் சென்ற மாதத்தில் அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்து இருந்தனர்.

எனினும் திரு பண்டாரியே திரும்பவும் இங்கு வரப்போகிறார். ''போன மச்சான் திரும்பி வந்தார் பூ மணத்தோடே'' என்று ஒரு பாடல். பண்டாரி பூ மாலையோடு வந்து இலங்கை அரசுக்குச் சூட்டி அதனை வெற்றி கொள்வாரா? அல்லது அழுதும் பிள்ளை அவளே பெறவேண்டும் என்ற நிலைக்கு இலங்கை அரசைத் தள்ளி விட்டுச்செல்வாரா?

எல்லாம் அவரது ராஜதந்திர சாதுரியத்தைப் பொறுத்தது. இனப் பிரச்சினையில் நியாயமான ஒரு தீர்வுக்குரிய சிறு திருப்பத்தையாவது அவரால் செய்ய முடிகிறதா என்று பார்ப்போமே !

பாதுகாப்பு வலயத்தை கண்டித்து

கூட்டுறவுச் சங்கங்கள் கடையடைப்பு, பேரணி

காங்கேசன்துறை, ஜன. 27

பாதுகாப்பு வலயப் பிரகடனத்தைக் கண்டித்து யாழ். மாவட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்வரும் புதன்கிழமை கடையடைப்பும், கண்டனப் பேரணியும் நடத்த முடிவு செய்துள்ளன.

தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வாறு முடிவு எடுக்கப்பட்டது.

யாழ் மாவட்ட பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் இன்றுள்ள சூழ்நிலையில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. எஸ். சிவமகாராஜா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களும், வடபிராந்திய உணவுக் கட்டுப்பாட்டு இலாகா ஆணையாளர் திரு. பற்குணம், கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. இ. ஜெகநாதன், கூட்டுறவு மொத்த வியாபார ஸ்தாபன பிராந்திய ஆணையாளர் திரு. கந்தசாமி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானப்படி புதன்கிழமையன்று யாழ் இந்துக் கல்லூரிக்கு பின்னால் இருந்து ஆரம்பமாகும் பேரணி கூட்டுக் குழுவின் ஊர்வலத்துடன் இணைந்து யாழ் கச்சேரிவரை செல்லும்.

இந்தியா உதவினால் 3 மாதத்தில் பிரச்சினையை தீர்த்து விடுவேன்

'இந்து' பேட்டியில் ஜே.ஆர்.

உண்மையில் வெளி நாட்டுக் கூலிப் படைகள் எமது படைகளுடன் சேர்ந்து போராடவில்லை.

பிரிட்டனைச் சேர்ந்த சில பைலட்டுக்கள் பயிற்சி வழங்குகின்றார்கள்.

எமது அதிரடிப்படை வீரர்களுக்கும் சில பிரிட்டிஷ் அதிகாரிகள் பயிற்சி வழங்குகின்றனர்.

இதை நாம் மறுக்கவில்லை. நாம் சம்பளம் கொடுக்கிறோம். அவர்கள் வந்து பயிற்சி அளிக்கின்றனர். அவர்களைப் போன்ற பயிற்சியாளர்கள் எம்மிடம் இல்லை. நமது அதிரடிப்படை அற்புதமாக பணியாற்றுகிறது அவர்கள் மிக ஒழுங்காகச் செயல்படுகிறார்கள்.

நமது அதிரடிப்படை கிழக்கு மாகாணத்தில் இயங்குகிறது. எம்மிடம் உள்ள மிகச் சிறந்த கொரில்லா தாக்குதல் படையினர் இவர்களே.

இங்கிலாந்தில் உள்ள எஸ் ஏ எஸ் பிரிவின் ஒரு பகுதி தான் கே. எம். எஸ். என்பது. கினி மீனி சேவை என்றும் இது அழைக்கப்படுகிறது.

'காட்டினுள் உள்ள பாம்பு' போன்றது இச் சேவை

ரொடீஷியாவிலும் ஓமானிலும் கினி மீனி படைகள் போரிட்டுள்ளன.

உலகம் முழுவதும் பயிற்சி வழங்குவதற்காக கினி மீனி சேவை நிறுவப்பட்டது.

நாங்களும் அவர்களை சம்பளத்துக்குப் பிடித்துள்ளோம்.

பாகிஸ்தான் தரும் உதவி

இலங்கை ராணுவத்தில் பாகிஸ்தான். இஸ்ரவேல் மற்றும் கூலிப் படைகள் பற்றிக் கேட்டபோது திரு. ஜெயவர்த்தன சொன்னதாவது;

''நான் ஏதாவது செய்ய வேண்டும்.

ஒரு யுத்தத்தில் நாம் ஈடுபட்டுள்ளோம்.

படுக்கையில் உட்கார்ந்து கொண்டு, 'நாட்டைக் கைப்பற்றுங்கள்' என்று தமிழ்ப் போராளிகளிடம் நான் சொல்ல முடியாது.

பாகிஸ்தானும் எமது வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கிறது. பயிற்சி முடிந்து எமது வீரர்கள் பாகிஸ்தானில இருந்து வந்து கொண்டிருக்கிறார்கள்.

இதை நான் மூடி மறைக்க விருப்பவில்லை.

பிரதமர் ராஜீவ் காந்தியிடமும் இதை நான் கூறி விட்டேன். வெட்ட வெளிச்சமாகத் தான் செய்கிறோம்.

எமக்கு ஆயுதம் தேவை என்றால் அவர்களிடம் இருந்து வாங்குகிறோம். வெளிச் சந்தையிலும் வாங்குகின்றோம்.

ரைபிள்களைத் தவிர எமக்கு வேறு ஒன்றும் தேவை இல்லை.

போராளிகளிடம் மோட்டோக்களும் ரைபிள்களும் உண்டு.

1815 நெப்போலியனின் யுத்த காலத்துக்கு நாம் போய் விட்டோம்.

அந்த அளவு ஆயுதங்கள் தான் எம்மிடம் உள்ளன.

எம்மிடம் பீரங்கிகள் இல்லை. சண்டை விமானங்கள் எமக்கு வேண்டாம். சண்டையிடும் ஹெலிக் கொப்டர்களும் எமக்குத் தேவை இல்லை. குண்டுகளும் எமக்குத் தேவை இல்லை.

காடுகளில் அங்கும் இங்குமாக சிலரை நாம் காணுகின்றோம். அவர்களினால் எமது முகாம்களில் ஒன்றைக் கூட தாக்க முடியாது.

நமது படைகள் பலம் பொருந்தியவைகளாக உள்ளன.

இந்தியா உதவுமானால் நிச்சயம் மூன்று மாதங்களில் எல்லாம் முடிந்து விடும். இப்படி நிச்சயமாக நம்புகிறேன்.

இலங்கையில் உள்ள இஸ்ரவேல் நலன் காக்கும் அலுவலகத்துக்கு வெளியே ஒரு இஸ்ரேலிடரும் நாட்டில் இல்லை.

மொஸாட் படை இல்லை. நாம் வாங்கும் சில படகுகள் தொடர்பாக சில உதவிகளையே அவர்களிடம் இருந்து பெறுகின்றோம். நாம் எங்கும் எதையும் வாங்கலாம்.

அவர்கள் வட மாகாணத்தில் சில பகுதிகளை பாதுகாக்க எமக்கு உதவலாம். தனிப்பட்டவர்களை அல்ல; சில பொருள்களை.

(நகைச்சுவையாக) நீங்கள் விரும்பினால் அங்கு உங்களை அனுப்புகிறோம். போய்ப் பாருங்கள்.

> **'இந்து' ஆங்கில நாளிதழுக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தன அளித்த பேட்டியின் இரண்டாவது பகுதி இன்று பிரசுரமாகிறது. பேட்டி கண்டவர்: 'இந்து' இணையாசிரியர் திரு. என். ராம்.**

இராணுவத் தீர்வு

கொடூரமான, இரக்கமற்ற, போரிடவேண்டும் என்ற எண்ணத்துடனான இராணுவ நடவடிக்கைகளைத் தான் தமிழ்ப் பகுதிகளில் தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி மேற்கொண்டு வருகிறார் என்பதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்.

நமக்கு தேவை அரசியல் தீர்வே தீவிரவாதிகளுடன் அரசியல் தீர்வு காண முடியாது. இது இராணுவப் பிரச்சினை. அவர்களும் இராணுவத் தீர்வையே நாடுகிறார்கள்.

நான் யாருடன் பேச்சுக்களை நடத்துவது?

நீங்கள் இணங்கிப் போகாவிட்டால் அவர்கள் சுடுகிறார்கள்.

தொண்டமானுடன் நான் பேசுவேன். அவர் பிரார்த்தனை நடத்தமுடியும்.

நான் சம்மதிக்காவிட்டால் அவர் வேலை நிறுத்தத்தை நடத்தலாம். அவர் துப்பாக்கி தூக்கவில்லை.

ஆகவே நான் அவருடன் பேசி அரசியல் தீர்வு கண்டேன்.

நான் ஆக்கிரமிக்கப் போகிறேன் என்று இந்தியா கூறினால் நான் எதிர்த்துப் போராடுவேன் அல்லது விட்டுக் கொடுப்பேன்.

இராணுவ அத்துமீறல்

தமிழ் பகுதிகளில் இராணுவ அத்துமீறல்கள் இருக்கத்தான் செய்கின்றன.

சில மாதங்களுக்கு முன்னர் அமெரிக்க அதிகாரி ஜெனரல் வெர்னன் வால்டர்ஸ் இலங்கை வந்தார்.

''உங்கள் துருப்புக்கள் வியட்னாமில் என்ன செய்தன?'' - என்று அவரிடம் கேட்டேன்.

இராணுவ அத்துமீறல்கள் இப்பொழுதுஅவ்வளவாக இல்லை

சட்டவிரோதமான தீவிரவாதிகளின் நடவடிக்கைகளுடன் படையினரின் செயல்களை ஒப்பிட முடியாது.

ஒருஜனநாயகநாட்டில் மக்கள் துப்பாக்கிகளை ஏந்த முடியாது.

விசேடமாக இந்தியாவில்...காந்திஜியின் தத்துவம், புத்தபிரானின் அகிம்சை - அங்கு உருவானவை.

எவ்வளவு நியாயமாக இயக்கங்கள்இருந்தாலும் 'வன்செயல் வேண்டாம்' என்றுகூறிவிடவேண்டும். தயவு செய்து உங்களால் அதைச்செய்ய முடியும். (வளரும்)

பொய்யாமொழி

குறள்:
பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற.

பொருள்:
பெறத் தகுந்த பேறுகளில் அறிய வேண்டியவைகளை அறியும் நன்மக்களைப் பெறுவதைத் தவிர, மற்றப் பேறுகளை யாம் மதிப்பது இல்லை.

ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம் போராட்டத்துக்கு பூரண ஆதரவு

யாழ்ப்பாணம் ஜன.28

பாதுகாப்பு வலயத்துக்கு எதிராக அன்னையர் முன்னணி நடத்தும் மறியல் போராட்டத்துக்கு ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம் பூரண ஆதரவு தெரிவித்துள்ளது.

இதுசம்பந்தமாக ஐக்கிய தொழிலாளர் சம்மேளத்தின் சார்பில் திரு ஆ. க. அண்ணாமலை அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

1977 தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஐ. தே. க. அரசு தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கப்போவதாக உறுதி அளித்தது

அத்துடன் தமிழ் மக்களின் ஒரு பகுதியினரின் ஆதரவையும் பெற்று பதவிக்கு வந்தது.

பதவிக்கு வந்ததும் தனது வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்ட இந்த அரசாங்கம் ஒன்றன்பின் ஒன்றாக இனக் கலவரங்களைக் கட்டவிழ்த்து விட்டு, தமிழ் மக்களைச் சொல்லொணாத் துன்ப துயரங்களுக்கு ஆளாக்கி வருகின்றது.

வடபிரதேச தொழிற் சங்க கூட்டுக்குழு 5 அம்ச அடிப்படைக் கோரிக்கைகளின்மீது முன்னெடுத்து வரும் போராட்டத்தின் தொடர்ச்சியாக 29 ஆம் திகதி நடத்தவிருக்கும் ஊர்வலத்தில் எல்லா மக்களும் கலந்து கொள்ள வேண்டுமென அழைக்கின்றோம்.

தமிழ் மக்களைக் கொன்றுகுவிக்கும் இந்த அரசாங்கம் தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், மாணவர்கள் அனைவரையும் நசுக்கி வருகின்றது.

ஆகவே பொதுமக்கள், ஒன்றிணைந்து போராடி இந்த அரசாங்கத்தைத் தூக்கியெறிவதே தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் முதற் கட்டமாயிருத்தல் வேண்டும்.

இவ்மாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநகர சபைக்கு புதிய அலுவலகம் நிறுவுவதைப் பின்போடுக

முன்னாள்எம்.எம். ஸிக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ் மாநகர சபைக்கு புதியஅலுவலகம் அமைக்கும் திட்டத்தை நாட்டின்நிலை மைழமைக்குத் திரும்பும்வரை பின்போடுக.

யாழ் மாநகர ஆணையாளருக்கு இவ்வாறு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

யாழ் மாநகரசபைமுன்னாள் உறுப்பினர்கள் 25 பேர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

இவர்களில் 5 முன்னாள் மேயர்கள், 5 முன்னாள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

---

5 பெண்களுக்கு 6 மாதப் பயிற்சி

சாவகச்சேரி, ஜன. 28

யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் இருந்து ஐந்து யுவதிகள் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்துக்கு ஆறு மாதகாலப் பயிற்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவர் கணக்காளர் பயிற்சியும் இருவர் சந்தைப்படுத்தல் முகாமைத்துவப் பயிற்சியும் ஒருவர் தமிழ் சுருக்கெழுத்தாளர் பயிற்சியும் பெறுவர்.

போராட்டத்தை பலப்படுத்த பொதுமக்கள் ஆதரவு தேவை

அன்னையர் முன்னணி வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜன.28

பாதுகாப்பு வலயத்துக்கு எதிரான ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வெகுஜன நடவடிக்கைகளில் கலந்து கொண்டு பலப்படுத்தும்படி பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அன்னையர் முன்னணிச் செயலாளர்இந்தவேண்டுகோளை விடுத்துள்ளார்.

தமிழ் மக்களின் உயிர், உடைமைகளைப் பறிப்பதை நியாயப்படுத்தவே அரசாங்கம் பாதுகாப்பு வலயத்தை கொண்டுவந்துள்ளது.

இதை நாம் ஒவ்வொருவரும் எதிர்க்கிறோம். எமதுஎதிர்ப்பு தனித்தனியாக இருக்கக் கூடாது. அது ஒன்று இணைக்கப்பட்டுத் திரளும் போதுதான் பலமிக்க சக்தியாக வெளிப்படும்.

இப்படி அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

கவின்கலைகள் தொழில் நுட்ப பாடங்களைகற்பதில் யாழ் மாணவர் ஊக்கமில்லை

யாழ்ப்பாணம், ஜன. 28

கவின்கலைகள், தொழில்நுட்பப் பாடங்கள் ஆகியவற்றை கற்பதில் யாழ்ப்பாண மாவட்ட மாணவர்கள் மத்தியில் போதிய ஊக்கம் இல்லை.

வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு எம். சிமியாம்பிள்ளை 1986 ஆம் ஆண்டுக்கான கல்வி அமுலாக்கல் திட்டத்தில் இவ்வாறு வருத்தம் தெரிவித்துள்ளார்.

வட்டாரக் கல்வி அதிகாரிகள், கொத்தணிப் பாடசாலை அதிபர்கள், பாடசாலை அதிபர்கள், கல்விவள நிலையப் பொறுப்பாளர்கள் ஆகியோருக்கு [illegible] கப்பட்டுள்ள சுற்று நிரு [illegible] பட்டு உள்ளதாவது:-

பொதுக்கல்வியை முழுமையாகப் பெறுது இடையில் பாடசாலையை விட்டு வெளியேறியோரின் எண்ணிக்கையைக் குறைத்தல் வேண்டும்.

பொதுப்பரீட்சையில் எதிர்பார்க்கும் பெறுபேறுகளின் [illegible] றளவு அதிகரிப்பது அவ [illegible]

பாடசாலை வகுப்பேற்றம் பெறாதவர்களின் எண்ணிக்கையை குறைத்தல் வேண்டும்.

கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தர வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கையினை அதிகரிக்கச் செய்தல்வேண்டும். பொதுக்கல்வியில் பங்கு பெறுவோரின் வீதத்தை அதிகரித்தல் வேண்டும்.

பாடசாலை, வட்டாரம், கொத்தணி அமைப்பு மட்டங்களில் நடைபெறும் செயற்பாடுகளை ஒன்றிணைத்து இவற்றை அமுலாக்க வேண்டும்.

—இவ்வாறு இச்சுற்று நிருபத்தில் வலியுறுத்தப்பட்டு உள்ளது.

ஐஸ் கிறீம், சீனியால் பல் பழுதடைகிறது

அமெரிக்க நிபுணர் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 28

ஐஸ்கிறீமும் சீனியும் தான் குழந்தைகளின் பற்களை பழுதாக்குகின்றன.

இதன் காரணமாக இலங்கையில் குழந்தைகள் மத்தியில் பற்கள் பழுதாவது அதிகரித்து வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க பல் சிகிச்சை நிபுணர் டாக்டர் வில்லியம் டி மக்ஹியூ இத்தகவலை கொழும்பில் வெளியிட்டார்.

''பற்பசை பாவித்து தினமும் இரண்டு தடவை பற்களை பிரஷ் செய்ய வேண்டும்.

''தினமும் ஒரு தடவை, துப்புரவு செய்யும் இரசாயனப் பொருள் கலந்த திரவத்தால் வாயைக் கொப்பளிக்க வேண்டும்,- இப்படி டாக்டர் மக்ஹியூ சொன்னார்.

இப்படி ஒழுங்காகச் செய்து வந்தால் பற்களை எந்த நோயும் தாக்காது- என்றும் நிபுணர் கூறினார்.

பற்களைத் துப்புரவு செய்யக் கூடிய இரசாயனப் பொருள் 'குளோரொஹெக்ஸிடின்' (Chlorohexidine) என்று சிபார்சு செய்யப்பட்டுள்ளது இதை எவ்வளவு நீரில் கலந்து பாவிக்க வேண்டும் என்பதை பல் வைத்தியருடன் ஆலோசித்து நிர்ணயிக்க வேண்டும்-

இப் படி அமெரிக்க நிபுணர் டாக்டர் மக்ஹியூ சொன்னார்.

BITSMANS Institutes
MANIPAY
86 A/L பௌதீகவியல் (HEAT)
மீட்டல்
திரு. சௌந்தி
தாவரவியல் (மீட்டல்)
திரு. குகாதரன்
ஆரம்பம்: 30—1—86 3-00 p.m.

உதயன்
28 01-1986

BITSMANS Institutes
MANIPAY
ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க
SPOKEN ENGLISH
with GRAMMAR
By S. B. IYAR (Nallur)
ஆரம்பம்: 1—2—86
சனி 4-00 p.m.
(குறிப்பிட்ட தொகை மாணவர்களே அனுமதிக்கப்படுவர்)

வவுனியாவில் தேடுதல்

அறுவர் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஜன. 28

வவுனியாநகரில் ஆயுதப்படையினர் நேற்று நண்பகலிலிருந்து மாலை 6மணிவரையிலான தேடுதல் நடவடிக்கையில் 6 பேரை கைதுக்செய்தார்கள்.

ஆயுதப்படையினர் போன்று சிருட்ட அணிந்த மூன்று முகமூடி இளைஞர்கள் தலையாட்டவே, படையினர் இந்த இளைஞர்களைக் கைது செய்தார்கள்.

இத் தேடுதல் நடவடிக்கை வவுனியா நகரிலும் [illegible]றம்பைக்குளம் பகுதியிலும், ஹொறப்பொத்தானை வீதியிலும் நடந்தது

இப்படி கைது செய்யப்பட்ட இளைஞர்களில் ஒருவரான வில்லியம் ரஞ்சன் என்பவர் ஆயுதப்படை வீரர் ஒருவரை தாக்கிவிட்டு ஓடும்பொழுது காலில் சுடப்பட்டு மீண்டும் கைது செய்யப்பட்டார்.

இச் சம்பவத்தினால் வவுனியா நகரில் நேற்று நண்பகலுக்குப்பின் பதற்றம் நிலவியது

விளையாட்டரங்கு

திருக்குமரன் அணி சாம்பியனாகியது

சுன்னாகம், ஜன. 28

சுன்னாகம் கந்தரோடை சிக்கோ டிஸ்கோ சேறியோ விளையாட்டுக் கழகத்தினர் நடத்திய ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் உரும்பராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் சாம்பியனானது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் பெருந்தொகையான ரசிகர்கள் மத்தியில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் உரும்பராய் திருக்குமரன் கழகத்தினை எதிர்த்து மயிலங்காடு ஞானகலா அணியினர் விளையாடினர்.

ஞானகலா அணியினர் தமக்கு கிடைத்த முதலாவது பனல்டியைச் சரிவரப் பயன்படுத்த; தவறியது இவர்களுக்குத் தோல்வியற்பட முதற்காரணமாகியது.

இடைவேளை வரை இரு அணியினரும் திறமையாக விளையாடினர்.

திருக்குமரன் அணி ஒரு கோல் போட்டு முன்னணியில் நின்றது.

இடைவேளையின் பின் அடுத்தடுத்து மேலும் நான்கு கோல்களை திருக்குமரன் அணியினர் போட்டனர்.

போட்டி முடிவடையும் போது திருக்குமரன் அணி 5-0 கோல்களால் ஞானகலா அணியைத் தோற்கடித்து 'சம்பியன்' ஆகியது.

போட்டிக்குத் திரு. ராஜேந்திரா மத்தியஸ்தம் செய்தார்.

குருளைச் சாரண தலைவர் ஆதார பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஜன.28

குருளைச் சாரணத்தலைவர் ஆகாரப் பயிற்சி வகுப்புக்கள் யாழ் மாவட்ட சாரண கிளைச் சங்க பயிற்சிக் குழுவினால் ஜனவரி 30, 31, பெப்ரவரி 1 ஆம் திகதிகளில் யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

இப்பயிற்சி வகுப்புகளுக்குத்தகைமைவாய்ந்த சகல ஆசிரியர்களையும் அனுப்பி வைக்கும்படி வட மாநில கல்விப் பணிப்பாளர் பணித்துள்ளார்.

பாரபட்ச----

1-ம் பக்கத் தொடர்ச்சி

றிரவு அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அதில் பின் கண்டவாறுகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கிளிநொச்சி கூட்டு முகாம் தாக்கப்பட்டிருந்தைத் தொடர்ந்து பாதுகாப்புக் கருதி ரயில்வே பாதைப் பக்கமாகப் போய்ப் பதிலுக்குச் சுடுமாறு சில "இன்பன்ரி" சிப்பாய்களுக்குப் பணிக்கப்பட்டது.

அவர்களில் ஒருவர் ரயில் நிலையத்திற்குள் திடீரெனச் சுட்டுவிட்டார். இதனைக் கண்ட மற்றச் சிப்பாய்கள் அவரை மடக்கிப்பிடித்து அவரின் ஆயுதங்களைப் பறித்து முகாமுக்குகூட்டி வந்தனர்.

இந்தக் காரியத்தைச் செய்தவர் முகாமுக்கு வந்த பின்னர் முன்னுக்குப் பின் முரணாகப் பிதற்றிக் கொண்டிருந்தார்.

தாம் தீவிரவாதிகளையே சுட்டதாகச் சொன்னார். அவர் நடுங்கியபடி நிலைகுலைந்தும் காணப்பட்டார்.

அவர் இப்போது கொழும்பு இராணுவத் தலைமையகத்துக்குக் கொண்டுவரப்பட்டுவிசாரிக்கப்படுகிறார்.

PATRICIAN
Institute of Higher Studies
COMPUTER
Programming Courses
FOR
PROFESSIONALS and SCHOOL LEAVERS
(6 MONTHS-WEEK-END COURSES)
Lectures by:
Mr. N. S. RAJAH
B.Sc. (Eng.) Hons. (Lond), A.M.I.C.E. M.C.S.
★ கட்டிடப் படம் வரைதல் (DRAFTSMANSHIP) | 6 மாத காலப் பயிற்சி (ஆங்கிலம்)
Lectures by:
Mr. C. DURAIRAJAH
Hnd. U.K. I.Q.S. Part I

நீத்தார் பட்டியல்

பிள்ளையார் ஸ்ரோர்சின்
உரிமையாளர் க. இராசதுரை
அவர்கள் காலமாகி விட்டார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள்
பற்றிய விவரம் பின்னர்
அறிவிக்கப்படும்.

காணவில்லை

சித்தன்கேணிக்கும் மூளாய்க்கும் இடைப்பட்ட டச் வீதியில் வெ. சுந்தரம்பிள்ளையின் அடையாள அட்டை பர்ஸுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க் கண்ட விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும். வெ. சுந்தரம்பிள்ளை, [illegible] மணல், வலந்தலை, காரைநகர்.





கிளிநொச்சி ரயில நிலைய துப்பாக்கி பிரயோகத்தில காயம் அடைந்தவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரும் அடங்கி உள்ளனர். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சின்னையா நல்லையா (வயது 38) நல்லையா நாகேஸ்வரி (வயது 30) நல்லையா கமலதாஸ் (வயது 5) ஆகியோரைப் படங்களில் காணலாம்.

இவர்களது மற்றொரு மகனான நல்லையா ரூபதாசன் (வயது 8) ரயில் நிலையத் தாக்குதலின் போது அதே இடத்தில் மரணமானார்.

மதவாச்சியில் உள்ள கமத்துக்குச் செல்வதற்காக இக்குடும்பம் கிளிநொச்சி ரயில் நிலையம் வந்து யாழ் தேவிக்காகக் காத்திருந்தது.

தலவாக்கொலையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. எம். எஸ் செல்லச்சாமி தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. அத்துலத் முதலியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இச்சம்பவங்கள் பற்றி அறியப்படுவதாவது:

தலவாக்கலையில் இருக்கிறது மிட்லண்ட் தோட்டம். அங்கு பணிபுரியும் மலையகத் தமிழர் குடும்பங்களைச் சேர்ந்த சிலர் தைப்பூசத்தையொட்டி அங்குள்ள கோயில் ஒன்றில் நடந்த திருவிழாவுக்குப் போய் விட்டுத் திரும்பிக்கொண்டிருந்கள்.

அப்போது அவர்களைத் திடீர் என வழிமறித்த இனந்தெரியாத குண்டர்கள் சிலர் தாக்கினர். அது கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்தது.

இந்தத் தாக்குதலில் தோட்டத் தொழிலாளர்கள் எட்டுப்பேர் காயமுற்றனர்.

அவர்களில் படுகாயமுற்றவர்கள் இருவர் லிண்டுல ஆஸ்பத்திரியில் அனுமதிக்கபபட்டனர்.

அடுத்தநாள் திங்கட்கிழமை, குறிப்பிட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பாக தகவல் அறிவதற்காக இ. தொ. கா. வின் தலவாக்கலை மாவட்ட அரசியல் பிரிவு அமைப்பாளர் திரு. பி. சந்திரசேகரன் அங்கு சென்றார்.

அவ்வேளை அவரும் பலமாகத் தாக்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து மிட்லண்ட் தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 30,000 தோட்டத் தொழிலாளர் நேற்று வேலை நிறுத்தம் செய்தனர்.

தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து தலவாக்கலைப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இ. போ. ச வுக்குச் சொந்தமான இரண்டு பஸ்கள் சேதமாக்கப்பட்டன. விவசாயத் திணைக்களத்துக்குச் சொந்தமான ஒரு வாகனமும் சேதப்படுத்தப்பட்டது.

வாகனச் சேதங்களைத் தொடர்ந்து கடை ஒன்றும் தீக்கிரையானது.

இதேவேளை காயமுற்ற மலையகத் தமிழர் தங்கியிருந்து சிகிச்சைபெற்ற லிண்டுல ஆஸ்பத்திரி தண்ணீர் தாங்கியில் நச்சுப்பொருள் கலக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

தலவாக்கலையில் நேற்று நிலைமை மேலும் மோசமடைந்தது. சிங்கள தமிழ் மக்களிடையே கலவரம் வெடிக்கக்கூடிய அறிகுறிகள் தென்பட்டன. அதனைத் தொடர்ந்து அரசாங்கம் அங்கு உத்தியோகபற்றற்ற ஊரடங்கை அமுல் செய்தது.

மலையகத் தோட்டத் தொழிலாளரும் தொழிற்சங்க வாதியும் தாக்கப்பட்டது குறித்து இ. தொ. கா. பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி, பொலீஸ் மா அதிபர் ஆகியோரைச் சந்தித்து அசம்பாவிதங்கள் நடக்காது தவிர்க்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

மாட்டிறைச்சி......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொலீசார் நடந்து வந்துகொண்டிருந்தனர்.

சந்தையில் சில பொலீஸ்காரர் மரக்கறி, அரிசி வாங்கிக்கொண்டு நின்றனர்.

இரண்டு பொலீஸ் மாட்டிறைச்சிக் கடைக்குள் வந்து இறைச்சி வாங்கிக்கொண்டிருந்தனர்.

அப்பொழுது இறைச்சிக் கடைக்குப் பின்னால் உள்ள பற்றை ஒன்றில் இருந்து பொலீஸார்மீது துப்பாக்கிப் பிரயோகம மேற்கொள்ளப்பட்டது.

அதைத் தொடர்ந்து பரவலாக துப்பாக்கிச் சூடுகள் நாலாபக்கமும் பறந்தன.

நானும் வேறு அங்கு நின்ற மூவரும் இறைச்சிக் கடைக்குள் படுத்து விட்டோம் 15 நிமிடங்களாக சூடு நடந்து கொண்டிருந்தது. நாங்கள் இடத்தைவிட்டு அசையவே இல்லை.

எமது இறைச்சிக் கடைக்குள்ளும் சில பொலீஸார் வந்தனர். அங்கு படுத்திருந்த எம் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

கடையில் வேலைக்கு நின்ற பையனும் கடை முதலாளியும் அந்த இடத்திலேயே மரணமாகி விட்டனர்.

எனக்கும் காலிலும் கையிலும் சூடுபட்டது. என்னுடன் வந்த சுப்பன் பாப்பா என்பவருக்கும் சூடுபட்டது எனது கால்மாட்டில் படுத்திருந்தார். சுட்டுவிட்டு அவர்கள் வெளியே போய்விட்டனர் உடனே நான் இறந்த ஒருவரின் இரத்தத்தையும் மாட்டிறைச்சி இரத்தத்தையும் எடுத்து என் தலையில் தடவி, செத்தவன் போல் கிடந்தேன்.

மீண்டும் வந்த சீருடையினர் துவக்குப் பிடியினால் என்மேல் அழுத்திப் பார்த்தனர். நான் அசையவே இல்லை. பின்னர் அவர்கள் போய் விட்டனர்.

பின்னர் நானும் பாப்பனும் எழுந்து தோட்ட வெளியினூடாக வீடுபோய்ச் சேர்ந் [illegible] சென்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தோம். [illegible]

இவருக்குக் கையிலும் காலிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

சுன்னாகத்தி....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தலைவர் கொமேனி ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசெய்ன் ஆகியோரின் உருவப் படங்களையும் ஊர்வலத்தில் வைத்திருந்தனர்.

சகோதரக் கொலைகளை ஈராக்கும் ஈரானும் நிறுத்திவிட்டுப் பொது எதிரியான இஸ்ரவேலுடனும் அமெரிக்காவுடனும் போராட வேண்டி ஊர்வலத்தில் கோஷம் எழுப்பப்பட்டது. "றேகனுக்கு வியட்நாம் பாடம் மறந்து போச்சு ஈழமண்ணில் மீண்டும் படிப்பார்"

"அமெரிக்க ஏகாதிபத்தியமே! தமிழ் மக்களைக் கொல்ல ஆயுதம் அனுப்பாதே"

"இராணுவத்தை வாபஸ் பெறு" பாதுகாப்பு வலயம் யாரைப் பாதுகாக்க?' இவ்வாறான சுலோகங்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் ஒலித்தன.

"இராணுவமே வெளியேறு இல்லையேல் வெளியேற்றுவோம்" என்ற நீண்ட சுலோகபனர் பெண்கள் சுமந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

"போத்தா! தடுப்புக் காவலில் இருப்பவர்களை இம்சிக்காதே!' 'இஸ்ரவேலே பலஸ்தீன விடுதலைப் போராளிகளின் மீதான அட்டூழியங்களுக்கு முற்றுப்புள்ளி வை!'

"இன்றைக்குத் தாக்கப்படுவது கோயில்—நாளைக்குப் பள்ளிவாசல்!"

"றேகனே! சர்வதேச பயங்கரவாதத்தை நிறுத்து'

இவ்வாறான சுலோக அட்டைகள் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் எடுத்து வரப்பட்டன.

ஊர்வலத்தின் முடிவில் சந்தை மைதானத்தில் மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. ஊர்வலத்தில் கலந்து கொண்டோருக்கு தாகசாந்தியும் கொடுக்கப்பட்டது.

ஜே. ஆர், றேகன் சிமொன் பெரஸ் ஆகியோரின் கொடும்பாவிகள் கூட்டம் நடைபெற்ற மைதானத்தில் எரிக்கப்பட்டன.

மாநகரசபை

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

தணை மேயர்கள் அடங்குகின்றனர்.

புதிய அலுவலகம் நிறுவுவது சம்பந்தமாக பொது மக்களிடையே பல தரப்பட்ட அபிப்பிராயங்கள் நிலவுகின்றன தற்போதைய சூழ்நிலையில் நிர்மாணவேலைகள் குறுகிய காலத்தினுள் நிறைவேற்ற முடியாது — இப்படி இந்த வேண்டுகோளில் காரணங்கள் காட்டப்பட்டுள்ளன

எண்ணெய் விலை வீழ்ச்சி

நியூயோர்க், ஜன 27

எண்ணெயின் விலை உலகச் சந்தையில் வீழ்ச்சி அடைந்துள்ளது.

விலை வீழ்ச்சி நிறுத்தப்படும் அறிகுறிகள் தென்படுவதாக இல்லை என்று நியூயோர்க் அவதானிகள் கூறுகின்றனர்

ஒரு பரல் எண்ணெய்க்கு 60 சதம் தொடக்கம் 75சதம் வரை விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் முதல் ஓடியோகிளப்
இலவச அங்கத்துவம்
நியூவிக்ரேஸ் ஓடியோ கிளப்
அங்கத்தவராவதற்கு அறிமுகம்,
வைப்புப்பணம் வேண்டியதில்லை.
இன்றே அங்கத்துவம் பெற்றுப்
பின்வரும் பாடல்களை ஒறிஜினல்
மக்சல் கசற்றில் கேட்டு மகிழுங்கள்.
- ✱ பக்திப் பாடல்கள்,
- ✱ புதிய பழைய சினிமாப் பாடல்கள்,
- ✱ நாகஸ்வர, வாத்திய இசைகள்,
- ✱ பிறந்த நாள், திருமணப் பாடல்கள்,
- ✱ தத்துவ, சோகப் பாடல்கள்,
- ✱ டிஸ்கோ, ஆங்கில, இந்திப்பாடல்கள்,
- ✱ கதை வசனங்கள்,
வேண்டிய கசற்றை வேண்டிய நாட்களுக்கு கேட்டு ரசித்தபின் வாடகை,
ஒரு கசற்றுக்கு ஒரு நாளுக்கு
ரூபா 2/- மட்டுமே.
பாடல்கள் பதிந்த ஒறிஜினல்
மக்சல் கசற் விலை ரூபா 29.50.
மேலதிக விபரங்களுக்கு நேரில்
நியூ விக்ரேஸ் ஓடியோ கிளப்
23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23582.

எமது புதிய வெளியீடுகள்
- ✱ ஜெயசங்கர் – K. R.விஜயா.
  சமய புரத்தாளே சாட்சி (Pyramid Master)
- ✱ நரேஷ் குமார் – பூர்ணிமா
  பொருத்தம் (Pyramid Master)
- ✱ சுரேஷ் – நளினி.
  ஆஷா (V. G. P. Master)
- ✱ பாண்டியன் – ரேவதி.
  ஆண் பாவம் (V. G. P. Master)
THE WAR DEVILS (War Film)
குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி:- 23665.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட். 207,மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 8 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி 28-01-1986.